# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● ஏப்ரல் 28, 2018 Weekly E-paper ● April 28, 2018





# ‘குட்கா’ பதவி விலகி, விசாரணையை எதிர்கொள்ளட்டும்!


எழில்.இளங்கோவன்




கடந்த 2016ஆம் ஆண்டு குட்கா வியாபாரி மாதவராவுக்குச் சொந்தமான கிடங்கிலிருந்து, வருமான வரிச் சோதனையில் சிக்கிய டைரி ஆதாரங்கள் மிக வலுவானவையாகக் கருதப்படுகின்றன.

ஓர் அமைச்சர், இரண்டு டி.ஜி.பி.கள், இரண்டு இணை ஆணையர்கள், இரண்டு உதவி ஆணையர்கள், ஆய்வாளர்கள், சென்னை மாநகராட்சி உணவுக் கட்டுப்பாட்டுத் துறை அதிகாரிகள், கவுன்சிலர்கள் என்று ஒரு பெரிய பட்டியலில் லஞ்சம் வாங்கியவர்கள் வருகிறார்கள், அந்த டைரியில்.

குட்கா போன்ற கொடும் போதைப் பொருள்கள் வடநாட்டிலிருந்து மாநிலங்கள் தாண்டி தமிழ்நாட்டுக்கு வருகின்றன. எனவே இதில் மத்திய – மாநில அதிகாரிகளும் வருகிறார்கள்.

இதனை சி.பி.ஐ.தான் விசாரிக்க வேண்டும் என்று தி.மு.கழகச் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.அன்பழகன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

தி.மு.கழகத்தின் வலுவான அசைக்க முடியாத ஆதாரங்களினால், ஏப்ரல் 26 அன்று குட்கா ஊழலை சி.பி.ஐ. விசாரிக்கச் சென்னை உயர்நீதி மன்றம் ஆணையிட்டது.

இப்பொழுது அ.தி.மு.க. பிரபலங்களும் அதிகாரிகளும் குற்றவாளி கூண்டுக்குள் வருகிறார்கள்.

குற்றச்சாட்டுக்கு உள்ளான முதல்வர் எடப்பாடி, அமைச்சர் விஜயபாஸ்கர் மற்றும் டி.ஜி.பி. ராஜேந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் நேர்மையாகப் பதவி விலகி விசாரணையை எதிர்கொள்ள வேண்டும்.

குற்றவாளிகள் தப்பிவிடக்கூடாது! ஏனெனில் இது 40 கோடிக்கும் அதிகமான குட்கா போதை ஊழல். ●



ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## பொதுச் செயலாளர் வெளிநாடு பயணம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சுப. வீரபாண்டியன், பொது நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகவும், தன் பிள்ளைகளைப் பார்ப்பதற்காகவும், இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் தாயகம் திரும்பும் வரையில், இயக்கப் பணிகளை, மாநிலத் துணைப் பொதுச் செயலாளர்கள் தோழர்கள் சிங்கராயர், சிற்பிசெல்வராஜ் ஆகியோரும், கருஞ்சட்டைத் தமிழர் இதழ்ப் பணிகளை மாநிலப் பொருளாளர், இதழின் பொறுப்பாசிரியர் தோழர் எழில்.இளங்கோவனும் தம் பொறுப்பில் நடத்திச் செல்வர் என அறிவிக்கப்படுகிறது.

## நவீன மகாபாரதம்

*துரோணர்கள்*
*ஏகலைவர்களின் கட்டை விரல்களுக்காய்*
*வெறிநாய்போல் திரிகின்றனர்- நீட் தேர்வு*

*கருவறையில் கசக்கப்படும்*
*பாஞ்சாலிகளுக்குக்*
*கண்ணன் கருணை காட்டுவதே இல்லை - ஆசிஃபா*

*சகுனியின் சொக்கட்டான்களாய்*
*சி.பி.ஐ.யும், உச்சநீதிமன்றமும் - மோடி*

*மருமகன்களோ*
*இரட்டைத் துரியோதனர்கள்.*
*அடிமை சாசனமே*
*அவர்களுக்குக் கீதோபதேசம் - ஓ.பி.எஸ்-இ.பி.எஸ்*

*போராளிகள்*
*சிசுபாலர்களாய்ச் சிரம் அறுக்கப் படுகின்றனர்.*

*காவிரிக்கோ*
*ஆண்டுதோறும்*
*அஞ்ஞாத வாசம்!*

- வெற்றிச்செல்வன்

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## நீரும் நெருப்பும்

வடநாட்டுக்காரர்களுக்குத் தென்னாட்டவர்களைப் பிடிப்பதே இல்லை, குறிப்பாகத் தமிழகம்.

காரணம் இது பெரியார் மண்.

மக்கள் ஆட்சியில் மக்கள் வாடவும் கூடாது, மக்களை வாட்டவும் கூடாது.

இவை இரண்டும் மத்திய பா.ஜ.க. மோடி அரசுக்குத் தெரிவதே இல்லை. மக்களைப் பற்றிய சிந்தனையே இல்லாத ஓர் அரசியல் சுயநலம் கொண்ட ஆட்சி இது.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க 6 வாரங்கள் கெடு கொடுத்த நீதிமன்றத்தில், கடைசி நாளில் போய் - ஐயா! ஸ்கீம் என்றால் அர்த்தம் என்ன, சொல்லுங்கள்! எங்களுக்குத் தெரியவில்லை, என்று நிற்கிறது மத்திய அரசு. இதன் பொருள் என்ன?

தமிழகப் பயிர்கள் கருகவும், தமிழர்களின் வயிறுகள் காயவும் மத்திய அரசு பார்த்துக் கொண்டு இருக்கிறது என்றால் இதன் பொருள் என்ன?

இப்பொழுது மீண்டும் நீதிமன்ற வாசலில் நின்று கொண்டு கால அவகாசம் கேட்கிறது மத்திய அரசு, இதன் பொருள் என்ன?

கர்நாடக மாநிலத்தில் நடைபெற இருக்கும் தேர்தலில், எப்படியும் ஆட்சியைப் பிடிக்கும் எண்ணத்தில் கர்நாடகாவின் கண்ணில் வெண்ணையும், தமிழகத்தின் கண்ணில் சுண்ணாம்பும் தடவும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது மோடி அரசு.

இந்தியாவின் 22 மாநிலங்களில் நேரடியாகவும், கூட்டணியாகவும் ஆட்சி செய்யும் பா.ஜ.க.வின் ஆட்சியில் எந்த மாநிலத்திலும் அமைதி தவழவில்லை. பாலியல் குற்றங்கள், கொலைகள், கொள்ளைகள்தான் பெருகி வளர்கின்றன.

தமிழகத்தைப் பொருத்த வரையில் இந்த மண் சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளை ஏற்றுக்கொள்ளாது.

மத வெறியை நுழைய விடாது.

ராமராஜ்யம் அமைய வழிவிடாது.

- அதனால்தான் தமிழ் இனத்தையே மெல்லமெல்ல அழித்திடக் காவிரி நீரைத் தடை செய்து வருகிறது மத்திய அரசு.

இந்நீர் வேளாண்மைக்கு மட்டுமல்ல, குடிநீருக்கும் இதுதான் ஆதாரமாக அமைகிறது.

அன்று சிங்கள ஆரிய இனவெறி அரசு தமிழ் மக்கள் மீது நெருப்பை வீசி அழித்தது.

இன்று வல்லாண்மை ஆரிய இந்திய அரசு தமிழ் மக்களுக்கு நீர் கிடைக்காமல் செய்து அழித்து வருகிறது.

மீண்டும் ஓர் ஆரிய-திராவிடப் போர் தொடங்கியிருக்கிறது. சந்தித்துத்தான் ஆகவேண்டும், வலிமையாக.

**22.3.2018**

புதுச்சேரி சபாநாயகர் உத்தரவு ரத்து - இந்திரா பானர்ஜி

**27.4.2018**

தமிழ்நாடு சபாநாயகருக்கு உத்தரவிட முடியாது - இந்திரா பானர்ஜி

## யப்பா... ஒன்னும் சொல்றதுக்கில்ல.

கருஞ்சட்டைத் தமிழர் கட்செவியில்
**பேராசிரியர் என்.பாபு**



# மே நாள்




● இராகிலாதேவி

வேலை நாளுக்குச் சட்டப்பூர்வமான அளவு, முதலாவது தேவையாகும். இது இல்லாமல் தொழிலாளி வர்க்க முன்னேற்றம் மற்றும் விடுதலைக்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் முழுமையாக இருக்காது. வேலை நாளுக்கான சட்டபூர்வ அளவு எட்டு மணி நேரமாக இருக்க வேண்டும் என்று இம்மாநாடு முன்மொழிகிறது.

– பன்னாட்டுத் தொழிலாளர் கூட்டமைப்பு, ஜெனீவா,1866

அமெரிக்க நாட்டில் 1873–79 ஆம் ஆண்டு பொருளாதார மந்தநிலையைத் தொடர்ந்து, தொழில் உற்பத்தி பெருகியது. அமெரிக்காவின் முக்கியத் தொழில் மையமாக விளங்கிய சிகாகோ தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்த ஜெர்மானியர்களும், செக்கோஸ்லேவியர்களும் பணிபுரிந்தனர். அவர்களது வாழ்க்கைநிலை பரிதாபகரமானதாக இருந்தது. வாரத்தின் ஆறு வேலை நாள்களில் அவர்கள் அறுபது மணி நேரத்திற்கும் மேலாக உற்பத்தியில் ஈடுபடுத்தப் பட்டனர். தொழிலாளர்களின் கோரிக்கையை முன்னெடுக்கும் தொழிற்சங்கங்கள் ஒடுக்கப்பட்டன.

இந்நிலையில், எட்டு மணி நேரத்தை வேலை நாளுக்கான அளவுகோலாக நடைமுறைப்படுத்துவதை வலியுறுத்தி, 1886 ஆம் ஆண்டு அமெரிக்காவின் தொழிற்சங்கங்கள் பொது வேலைநிறுத்தத்தை அறிவித்தன. மே 4 ஆம் நாள், சிகாகோவின் “வைக்கோல் சந்தை சதுக்கம்” (Hay market) என்னும் இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட மோதலில் ஏழு காவல்துறையினரும், நான்கு தொழிலாளர்களும் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தை அடுத்து நடைபெற்ற விசாரணையில், பலர் கைது செய்யப்பட்டு, இறுதியில் நால்வர் தூக்கிலிடப்பட்டனர்.




**சிகாகோவில் 1886இல் நடந்த போராட்டத்தில் உயிரிழந்தவர்கள் நினைவாக அமெரிக்காவின் இலினாய்ஸ் மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள 'மே' நாள் நினைவுச்சின்னம்.**

தொடர்ந்து பல்வேறு போராட்டங்களுக்குப் பின்னர், 1904ஆம் ஆண்டு, ஆம்ஸ்டர்டாமில் நடந்த பன்னாட்டு சோஷலிச மாநாடு, மே முதல் நாள் அன்று எட்டு மணி நேரம் வேலை நாளாக அறிவிக்கும் கோரிக்கையை முன்னிறுத்திப் போராடுமாறு தொழிற்சங்கங்களுக்கு அறைகூவல் விடுத்தது. இன்று உலக நாடுகளால் மே முதல் நாள், பன்னாட்டுத் தொழிலாளர் நாளாக நினைவுகூரப்படுகிறது.

மே முதல் நாளை 1967 மே தினமாகக் கொண்டாடப் பொது விடுமுறை அளித்தது அறிஞர் அண்ணாவின் தலைமையிலான தி.மு.க ஆட்சி. அறிவிக்கப்பட்ட விடுமுறை தினத்துக்கு 1969ஆம் ஆண்டு ஊதியத்துடன் கூடிய பொது விடுமுறை நாளாக அறிவித்து, அந்த நாளுக்குச் சட்டம் இயற்றி சட்ட வடிவம் கொடுத்தது, கலைஞர் தலைமையிலான தி.மு.க ஆட்சி. இவை வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்திகள். ●

---

**SubaVeerapandian**
@Suba_Vee

28. 04. 2018 சனி மாலை, இங்கிலாந்து நாட்டின் லீட்ஸ் நகரில், (லண்டன் நேரப்படி) மாலை 5 மணிக்கு, "வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல் " என்னும் தலைப்பில் உரையாற்ற உள்ளேன்.


11:08 AM · 28 Apr 18

**SubaVeerapandian**
@Suba_Vee

#காவிரிமேலாண்மைவாரியம் அமைக்க மேலும் இரண்டு வார கால நீட்டிப்பைக் கோரியுள்ளது மத்திய அரசு. அடுத்த கால நீட்டிப்புக் கோரிக்கை, அடுத்த இரண்டு வாரங்களுக்குப் பின் முன்வைக்கப்படும். வாரியம் அமையும் வரை, தமிழகமே உயிரைத் தக்க வைத்துக் கொள். #BJP #DMK

11:04 AM · 28 Apr 18

---





## வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்

### ஆளுநர் மாளிகைக்குப் பேரணி

பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தில், கடந்த மாதம் 20ம் தேதியன்று உச்ச நீதிமன்றம் சில மாற்றங்களை அறிவித்தது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு முக்கியமான சட்டத்தில் ஒரு மேல்முறையீட்டு மனு வழக்கில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அ.கு.கோயல், லலித் இருவரும் தந்த அந்தத் தீர்ப்பு நாட்டையே அதிரவைத்தது.

பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை நீர்த்துப்போகவைக்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்பைச் சரிசெய்ய வலியுறுத்தி, கடந்த 24.04.2018 செவ்வாய்க்கிழமை அன்று வி.சி.க., பகுஜன் சமாஜ், புரட்சி பாரதம், இந்தியக் குடியரசுக் கட்சி, ஆதித்தமிழர் மக்கள் கட்சி, தமிழக முன்னேற்றக் கழகம் ஆகிய ஆறு அமைப்புகள் ஒன்றிணைந்து ஆளுநர் மாளிகையை நோக்கி நடத்திய பேரணி இது. ●



# பாஜக ஆட்சியில் மறுக்கப்படும் பழங்குடியினர் உரிமைகள்

**வெற்றிச்செல்வன்**

தங்களுக்கெனத் தனி ஒழுக்கத்தையும், சமயத்தையும், மொழியையும் பின்பற்றிக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்ட, வரையறுக்கப்பட்ட நிலப்பகுதியில் நெடுங்காலமாக வாழும் பூர்வகுடிகளே ஆதிவாசிகள் எனப்படும் பழங்குடியினராவர். (எல்.எம்.லெவிஸ்)

சாதி அல்லது இந்துக்களின் கீழ் வராத பழங்குடியினரைக் குறிக்க tribe என்ற சொல், ஆங்கிலேயரால் பயன்படுத்தப்பட்டது. விடுதலைக்குப் பின்னர், பட்டியல் பழங்குடியினர் (Scheduled tribes) என்ற சொல் பழங்குடியினரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. ஆதிவாசி, வனவாசி போன்ற சொற்களும் பழங்குடியினரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் பத்துகோடிக்கும் மேற்பட்ட பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். மகாராஷ்டிரம் மற்றும் ஒடிசா மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான பழங்குடியினர் வாழ்கின்றனர். இந்தியாவில் வாழும் பழங்குடியினரில் 59 விழுக்காட்டினரே எழுத்தறிவு பெற்றவராவர்.

விடுதலைக்கு முன்னும் பின்னும், வளர்ச்சி என்ற பெயரில் கடுந்துயரங்களை அனுபவித்தவர்கள் பழங்குடியினரே ஆவர். தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல், அணைகள் கட்டுவது, சுரங்கம் மற்றும் குவாரி அமைப்பது ஆகியவற்றிற்கு அவர்கள் கொடுத்த விலை மிகப்பெரியது. காட்டு விலங்குகளையும், பல்லுயிர்களையும், தேசிய பூங்காக்களையும் அமைக்க இதுவரை இலட்சக்கணக்கான பழங்குடியினர் தமது வாழிடங்களைவிட்டு வெளியேற்றப் பட்டுள்ளனர். தான் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த இடத்தை இழந்து விரட்டப்படும் மக்கள் பல்வேறு வகையான அடக்குமுறைகளுக்கும் ஆளாகி வருகின்றனர். பழங்குடியினருள்ளும் மிகவும் ஒடுக்கப்பட்டவர் ஆங்கிலேய அரசால் சட்டத்தின் மூலம், குற்றமரபினர் என்று அறிவிக்கப்பட்டவர்களே. 1952ஆம் ஆண்டு அச்சட்டங்கள் திரும்பப்பெறப்பட்ட போதும், அவர்கள் தொடர்ந்து ஒதுக்கப்பட்டும், இழிவுபடுத்தப்பட்டும் வருகின்றனர்.

இம்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குத் தீர்வு காணவும், அவர்களுக்கான உரிமைகளை வழங்கவும், 2006ஆம் ஆண்டு பழங்குடியினர் மற்றும் பாரம்பரியமாகக் காடு சார்ந்து வாழ்வோர் (காடுகளின் மீதான உரிமைகளை அங்கீகரிக்கும்) சட்டம் [The Scheduled Tribes and Traditional Forest Dwellers (Recognition of Forest Rights) Act] நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வன உரிமைச் சட்டம், 2006 என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதில் இடதுசாரிகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

**வன உரிமைச் சட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:**

- காடுகளை வாழிடத்திற்கும், வாழ்வாதாரத்திற்கும் சார்ந்திருக்கும் உரிமை பழங்குடியினருக்கு உண்டு.
- வனச் சிறு மகசூல்களை இலவசமாகச் சேகரிக்கவும், விற்கவும் உரிமை; தங்கள் சொந்த தேவைக்கு மட்டும் வியாபார நோக்கமில்லாமல் மரம், மூங்கில் உள்ளிட்ட வனப்பொருட்களைப் பயன்படுத்திக் கொள்ள உரிமை; பாரம்பரியமாகப் பயன்படுத்தி வந்த பாதைகள், நீர்நிலைகளைப் பயன்படுத்த உரிமை; மேய்ச்சலுக்கான உரிமை.
- தனிநபர் அல்லது சமூகத்திற்கான வன உரிமைகளை நிர்ணயம் செய்வதில் கிராம சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

சில குறைபாடுகளைக் கொண்டுள்ள போதிலும், பழங்குடியின உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முக்கிய அங்கமாக வன உரிமைச்சட்டம் விளங்குகிறது. எனினும், பிரதமர் மோடி தலைமையிலான நடுவண் அரசு இச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கும், நலிவடையச் செய்வதற்குமான எல்லா வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

முதலாவதாக, பழங்குடியினரைக் காடுகளிலிருந்து அப்புறப்படுத்தி, மறுவாழ்விடங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் அரசுத் திட்டங்களில், கிராம சபைக்கான அதிகாரங்கள் பல்வேறு சட்டத்திருத்தங்கள் மூலம் குறைக்கப்பட்டுள்ளன. இத்திருத்தங்கள் பழங்குடியினர் சமூகத்தைக் கலந்தாலோசிக்காமலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுரங்கங்கள் மற்றும் தாதுப்பொருட்கள் சட்டம், காடு வளர்ப்பு இழப்பீட்டு நிதிச்சட்டம் (CAMPA) மற்றும் வன உரிமைச் சட்ட விதிகள் ஆகியனவற்றில் கொண்டு வரப்பட்டுள்ள திருத்தங்களே இதற்குச் சான்றாகும்.

நடுத்தர அளவுள்ள நிலக்கரிச் சுரங்கங்களுக்கு (mid - sized coal mines) கிராம சபையின் அனுமதி தேவையில்லை என்ற விதிமுறை அமலாக்கப்பட்டுள்ளது.

பா.ஜ.க. ஆளுங்கட்சியாகவோ அல்லது கூட்டணியிலோ இருக்கும் மாநில அரசுகள், இவ்விதிமுறைகளை அமல்படுத்தி வனஉரிமைச் சட்டத்தை மீறி வருகின்றன. சான்றாக, மகாராஷ்டிரத்தில் அறிவிக்கப்பட்டுள்ள ‘கிராம விதிமுறைகள்’ (Village Rules) கிராம சபைக்குள்ள அதிகாரங்களை அரசால் அமைக்கப்படும் குழுக்களுக்கு வழங்கியுள்ளது.

அடுத்ததாக, தொழில் செய்வதை எளிதாக்குவது (ease of doing business) என்ற பெயரில் பழங்குடியினர் வாழிடங்களைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் செயலாகும்.

காட்டுயிர்களுக்கான தேசிய வாரியம் (National Board for Wildlife) என்பது தேசிய பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் அருகில் கொண்டுவரப்படும் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கிற அமைப்பாகும்.

பிரதமரைத் தலைவராகக் கொண்ட இவ்வமைப்பில், சார்பிலா வல்லுனர்கள் (independent experts) 15 நபர்கள் இருக்க வேண்டும். அதை வெறும் மூன்றாகக் குறைத்து வெறும் அரசு அலுவலர்களை மட்டும் கொண்ட அமைப்பாக இதை மாற்றியது மோடி அரசின் சாதனையாகும் ( !).

பதவியேற்ற மூன்று மாதங்களில் 41 திட்ட முன் மொழிவுகளில், 33 திட்டங்களுக்கு அனுமதி அளித்து, 7000 ஹெக்டேர் வனப்பரப்பில் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வளைந்து கொடுத்தது மோடி அரசின் மற்றுமொரு சாதனையாகும். இதில் பெருமளவு ஆதாயம் அடைந்தது குஜராத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் என்பது கூடுதல் செய்தி.

கடந்த இரு ஆண்டுகளில் 1.34 இலட்சம் ஹெக்டேர்களுக்கும் மேலான வனப்பரப்பு, வளர்ச்சித் திட்டங்களுக்காக மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது பல்வேறு பகுதிகளில் பழங்குடியினர் சமூகங்களின் இடப்பெயர்வுக்கு வழிவகுத்துள்ளது. ஆந்திரப்பிரதேசம், பொலாவரம் திட்டத்தால் மட்டும், 2 இலட்சம் ஹெக்டேர் காடு மூழ்கடிக்கப்படுவதால், 85,000த்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. இவற்றுள் பாதிக்கும் மேல் பழங்குடியினத்தவராவர். இதில் பெரும்பாலான திட்டங்களில், பழங்குடியினர் தமது நிலங்களுக்கான பட்டாவை இன்னும் பெறாதது, வன உரிமைச்சட்டம் விதித்திருக்கும் நிபந்தனைகளுக்குப் புறம்பானது.

அண்மையில், புலிகளின் வாழிடங்களில் வசிக்கும் பழங்குடியினருக்கோ, வேறு சமூகங்களுக்கோ வன உரிமைகள் எதையும் அளிக்க வேண்டாம் என்று மாநிலங்களுக்கு நடுவண் அரசு அறிவுறுத்தியுள்ளது (‘தி இந்து’ (ஆங்கிலம்), ஏப்ரல் 13, 2017) பழங்குடியினர் உரிமைகள் மீதான நேரடித் தாக்குதலாகும்.

பா.ஜ.க. ஆட்சியில் பசு, புலி போன்ற விலங்குகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம், மனிதர்களுக்கு அளிக்கப் படாதது கண்டனத்துக்கு உரியது. வெட்கக்கேடானது. சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வரும் நிலையில் அவர்கள் தமது உரிமைகளுக்காக வீதிக்கு வந்து போராடும் நாள் வெகு தொலைவில் இல்லை.

நன்றி : **விடுதலை**

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.